**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 11.02.2026

SC. 77/2022

அ.சா 9 – க. பாலமுருகன் , காவல் ஆய்வாளர்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ம் நாள் க. பாலமுருகன் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | க. பாலமுருகன் | தந்தை பெயர் | கருப்பன்னன் |
| வயது | 59 | கிராமம் | கீழ்வாணி |
| வட்டம் | அந்தியூர் | மாவட்டம் | ஈரோடு |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**<u>சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி : –</u>**

இவ்வழக்கில் R. மஞ்சுநாத் என்ற A. மஞ்சு என்பவர் 31.08.2015 ம் தேதி இரவு 10.30 மணியை போல் அவரது வீட்டு முன்பு வைத்து ஆஜர் படுத்திய கிரே கலர் அப்பாச்சி TN 70 C 4362 என்ற இரு சக்கர வாகனத்தையும் இருந்த ஏர்டெல் செல் எண் 9944570836 உடன் கூடிய மைக்ரோ மேக்ஸ் என்ற செல்போன் –1 , பணம் ரூ. 7500 /– ( 7X 1000, 1X 500 மொத்தம் 8 நோட்டுகள் ) ஆகியவற்றை சாட்சிகள் ரமேஷ் மற்றும் ஈஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன். மேற்படி மைக்ரோ மேக்ஸ் என்ற செல்போன் **அ.சா,பொ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. இவ்வழக்கில் R.R மஞ்சுநாத் என்பவர் 31.08.2015 ம் தேதி இரவு 11.00 மணியை போல் அவரது வீட்டு முன்பு வைத்து ஆஜர் படுத்திய சுமார் 14 இன்ச் நீளமும் , 1/2 இன்ச் அகலமும் உள்ள இரும்பு வளைக்கும் கம்பி ராடு , ஏர்டெல் செல் எண் 9629921181 உடன் கூடிய HTC என்ற செல்போன் –1 , பணம் ரூ.

7500 /- ( 7X 1000, 1X 500 மொத்தம் 8 நோட்டுகள் ) ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். மேற்படி இரும்பு வளைக்கும் கம்பி ராடு ஏற்கனவே, அ.சா.பொ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏர்டெல் சிம் உடன் கூடிய HTC செல்போன் **அ.சா,பொ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. இவ்வழக்கில் 3 வது எதிரி A. மஞ்சுநாத் என்ற மஞ்சு என்பவர் 31.08.2015 ம் தேதி இரவு 11.30 மணியை போல் அவரது வீட்டு முன்பு வைத்து ஆஜர் படுத்திய சுமார் 11 3/4 அளவுள்ள இரும்பு கத்தி -1 , ஏர்டெல் செல் எண் 9944611896 உடன் கூடிய IBall என்ற செல்போன் -1 , பணம் ரூ. 7500 /- ( 7X 1000, 1X 500 மொத்தம் 8 நோட்டுகள் ) ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். மேற்படி கத்தி ஏற்கனவே, அ.சா.பொ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏர்டெல் சிம் உடன் கூடிய I Ball செல்போன் **அ.சா,பொ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. இவ்வழக்கில் 4 வது எதிரி L. சுவாமிநாதன் என்ற மஞ்சு என்பவர் 01.09.2015 ம் தேதி நள்ளிரவு 00.15 மணியை போல் அவரது வீட்டு முன்பு வைத்து ஆஜர் படுத்திய TN 70 C 7015 பதிவெண் பஜாஜ் டிஸ்கவர் என்ற இரு சக்கர வாகனம் -1 ம் , ஏர்டெல் செல் எண் 9566623222 உடன் கூடிய ஜியோனி என்ற செல்போன் -1 , பணம் ரூ. 7000 /- ( 7X 1000 மொத்தம் 7 நோட்டுகள் ) ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். ஏர்டெல் சிம் உடன் கூடிய ஜியோனி செல்போன் **அ.சா,பொ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. இவ்வழக்கில் 5 வது எதிரி மாதேஷ் என்ற மாதப்பா என்பவர் 01.09.2015 ம் தேதி நள்ளிரவு 1.00 மணியை போல் அவரது வீட்டு முன்பு வைத்து ஆஜர் படுத்திய ஐடியா செல் எண் 8608097260 உடன் கூடிய லாவா என்ற செல்போன் –1 , பணம் ரூ. 7500 /– ( 7X 1000, 1X500 மொத்தம் 8 நோட்டுகள் ) ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். ஐடியா சிம் உடன் கூடிய லாவா செல்போன் **அ.சா,பொ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**( அரசு தரப்பில் இவ்வழக்கில் தொடர்புடைய அ.சா.பொ க்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur